மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான நாச்சியார்கோவில் ஊராட்சியில் குத்துவிளக்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், ஏற்கெனவே அந்தப் பகுதியிலே நடைபெறக்கூடிய குத்துவிளக்கு தயாரிக்கும் தொழிலுக்கு 'பூம்புகார்' மூலமாக பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு, அந்தத் தொழிலை மேம்பாடு அடையச் செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும், தொழிற்பேட்டை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார். 20 பேர் அங்கே தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நல்லரசு, தக்க நடவடிக்கைகள் எடுத்து, நிச்சயமாக ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

64—

சொந்தக் கட்டடம்

***55251—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஜாப்ராபாத் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 மார்ச் 27]

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஜாப்ராபாத் ஊராட்சியிலுள்ள ஜாப்ராபாத்-3 அங்கன்வாடி மையத்திற்கு புல எண் 563/19-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலைகடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழர் நெஞ்சங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியா புகழும் சந்தியா தாய் மகளே! உங்கள் உள்ளம் ஒரு வெண்ணிற ஆடை; உங்கள் அரசியல் ஆசான் ஆயிரத்தில் ஒருவன்; நீங்கள் அன்புக்கு மட்டுமே அடிமைப் பெண்; உங்கள் வாய்மொழியே இன்று அரச கட்டளை; (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை எங்கிருந்தோ வந்தாள் என்று பேசுவர் எடுபிடிகள்; வந்தாளே மகராசி என்று வாழ்த்துவர் எளியர்; (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் வரும் வரை நம் நாடு திக்குத் தெரியாத காட்டில்; நீங்கள் வந்த பிறகோ புலர்ந்தது புதிய பூமி; (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஏழைகள் வாழ்வில் இறைவன் ஏற்றிவைத்த ஒளிவிளக்கு; நல்லோருக்கு நீராகவும், தீயோருக்கு நெருப்பாகவும் இருப்பதால் நீங்களே நீரும் நெருப்பும்; (மேசையைத் தட்டும் ஒலி) எவரும் உங்கள் நிழலில் உள்ளவரை ராஜா வீட்டுப் பிள்ளை; உங்களை விட்டு விலகிச் சென்றாலோ அனாதை ஆனந்தன்! (மேசையைத் தட்டும் ஒலி) உங்களிடம் கையேந்திய கைகளுக்கெல்லாம் அன்னமிட்ட கை; அதனால்தான் அரசுத் தொட்டிலுக்குப் பிள்ளைகள் வருகின்றனர் உங்கள் அன்பைத் தேடி. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு சோதனைகள் பல வரலாம், எத்தனை சோதனைகள் வந்தாலும் அனைத்தையும் “சவாலே சமாளி” என்று சமாளிக்கும் உங்கள் பக்கம் தமிழக மக்கள் நிற்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜாப்ராபாத் ஊராட்சியில் ஏழு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் மூன்று மையங்களுக்கு மட்டுமே சொந்தக் கட்டடங்கள் இருந்தன. என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு மையங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும் ஜாப்ராபாத் மைய எண் 3 மற்றும் பத்தாப்பேட்டை மைய எண் 6 ஆகிய இரு மையங்களும் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுமூலம் அவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், வாணியம்பாடி தொகுதியில் மொத்தம் எத்தனை அங்கன்வாடி மையங்கள் உள்ளன என்பதையும், சொந்தக் கட்டடம் இல்லாத அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஜாப்ராபாத்-3 என்ற அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். இருந்தாலும், இந்த நிதியாண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு, வாணியம்பாடி தொகுதியிலுள்ள கொத்தூர், மருத்துவர் காலனி, நேதாஜி நகர், நேதாஜி நகர் தர்கா தெரு, நேதாஜி நகர் மில்லர் தெரு மற்றும் நேதாஜி நகர் முத்துமாரியம்மன்கோவில் தெரு ஆகிய ஆறு இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு கட்டட நிருவாக அனுமதியும், ஒரு அங்கன்வாடி மையத்திற்கு 4,50,000 ரூபாய் நிதியொதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 மார்ச் 27]

மேலும், இந்த ஜாப்ராபாத்-3 என்கின்ற அங்கன்வாடி மையத்திற்கு முன்னுரிமை தந்து, இப்போதே அந்த அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான பணியை எடுத்துச் செய்வதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வாணியம்பாடி தொகுதியில் மட்டும் பழுதடைந்து இருக்கின்ற அங்கன்வாடி மையங்களைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, தற்போது 46 மையங்களில் பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் உள்ள 580 அங்கன்வாடி மையங்களில் சிறிய பழுது நீக்கம் செய்வதற்கும், 62 மையங்களில் பெரிய பழுது நீக்கம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், அரசுக் கட்டடங்களில் இயங்கிவரும் அங்கன்வாடி மையங்களில் பழுது ஏற்பட்டிருந்தால், அதனையும் உடனடியாக சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலங்காயம் வட்டாரத்திலே மட்டும் 143 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 142 முதன்மை மையங்களும், ஒரு குறு மையமும் இதிலே அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த தமிழக மக்களுக்கு நாளும் ஒரு திட்டத்தைத் தந்து, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவருகின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.